## ‘திராவிட மாடல்’ ஆட்சியில் இந்தியாவிற்கே முன்மாதிரியாக

# கடலோர மாவட்டங்களில் புதிய அலையாத்தி காடுகள் உருவாக்கம்!

## சுற்றுச் சூழல் வரலாற்றில் ஒரு மைல் கல்!

**சென்னை, செப். 24-**

**‘திராவிட மாடல்’ ஆட்சியில், தமிழ்நாட்டில் உள்ள கடலோர மாவட்டங்களில் வளர்க்கப்படும் அலையாத்திக் காடுகள் உருவாக்கப்பட்டும், புனரமைக்கப்பட்டும் வருகின்றன. இது சுற்றுச் சூழல் வரலாற்றில் ஒரு மைல் கல் எனலாம்.**

இது குறித்து ‘தினகரன்’ நாளிதழில் வெளியான செய்தி வருமாறு:-



தமிழ்நாடு, 1,076 கிலோ மீட்டர் நீளமான தனது அழகிய கடற்கரையால் இயற்கையின் செழிப்பையும் வளத்தையும் பறைசாற்றுகிறது. இந்தக் கடற்கரையோரப் பகுதிகளில், பல்லுயிர் பெருக்கத்திற்கும், இயற்கைப் பேரிடர்களிலிருந்து பாதுகாப்பிற்கும் முக்கியப் பங்கு வகிப்பவை அலையாத்தி காடுகள். இவை, பூமியின் நுரையீரல்கள் என்று அழைக்கப்படும் காடுகளின் ஒரு தனித்துவமான வகையாக, கடல் மற்றும் நிலத்தின் இணைப்புப் பகுதியில் உயிர்ப்புடன் செழித்து வளர்கின்றன.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு, 2021ம் ஆண்டு பொறுப்பேற்றவுடன், “பசுமை தமிழகம், செழிப்பான எதிர்காலம்” என்ற தொலைநோக்குத் திட்டத்தை அறிவித்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பை முதன்மை நோக்கமாகக் கொண்டது. இதன் விளைவாக, மாநிலத்தின் கடலோர மாவட்டங்களில் 2,403 ஹெக்டேர் (சுமார் 5,935.813 ஏக்கர்) புதிய அலையாத்தி காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன, மேலும், 1,207 ஹெக்டேர் பழைய, சிதைந்த காடுகள் புனரமைக்கப்பட்டு புத்துயிர் பெற்றுள்ளன. இந்த மாபெரும் சாதனை, இந்தியாவின் சுற்றுச்சூழல் வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும்.

### முக்கியத்துவம்

அலையாத்தி காடுகள், கடல் மற்றும் ஆறு நீர் கலக்கும் சதுப்புநிலப் பகுதிகளில் வளரும் தனித்துவமான தாவர சமூகங்கள். இவை பல வகைகளில் மனிதர்களுக்கும் இயற்கைக்கும் பயனளிக்கின்றன.புயல் மற்றும் ஆழிப்பேரலை போன்ற இயற்கை சீற்றங்களில் கடல் அலைகளின் வேகத்தை 70% வரை குறைக்கின்றன. 2004 சுனாமியின் போது, பிச்சாவரம் மற்றும் முத்துப்பேட்டை அலையாத்தி காடுகள் உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்றியது இதற்கு ஒரு உதாரணம். இவை மீன்கள், இறால்கள், நண்டுகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட பறவை இனங்களுக்கு வாழ்விடமாகவும், இனப்பெருக்க மையமாகவும் உள்ளன. மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாகவும், சுற்றுலாவிற்கு அழகிய இடங்களாகவும் அமைகின்றன. கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சி, காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைக்கின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் 2,511 ஹெக்டேர் புதிய அலையாத்தி காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

திருவாரூர் (1,350 ஹெக்டேர்): முத்துப்பேட்டை சதுப்புநிலப் பகுதியில் மாநிலத்தின் மிகப்பெரிய திட்டம். கோடியக்கரை மற்றும் மன்னார்கோயில் பகுதிகளில் மீனவர் சமூகத்தின் பங்களிப்புடன் இயற்கை விவசாயத்துடன் ஒருங்கிணைந்து நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நாகப்பட்டினம் (250 ஹெக்டேர்): வேதாரண்யம் மற்றும் பாயிண்ட் காலிமியர் பறவைகள் சரணாலயத்தில் உவர் நீர் மீன் வளர்ப்புடன் இணைந்த காடுகள் உருவாக்கப்பட்டன. தூத்துக்குடி (211 ஹெக்டேர்): முத்துக் குளித்தல் மையங்கள் மற்றும் கோரல் பாறைகளைப் பாதுகாக்கும் வகையில் அப்பன் கிராமம் மற்றும் விலாத்திகுளம் பகுதிகளில் நடவு.

மயிலாடுதுறை (190 ஹெக்டேர்): சீர்காழி அருகே நீர்ப்பறவைகள் சரணாலயத்தை விரிவாக்கி, ஈரநிலங்களுடன் இணைந்த காடுஉருவாக்கம்.

தஞ்சாவூர் (120 ஹெக்டேர்): மன்னார் கோயில் பகுதியில் அங்கக விவசாயத்துடன் இணைந்த கடலோர வளர்ச்சி.

செங்கல்பட்டு (108 ஹெக்டேர்): கடலோரப் பகுதிகளில், குறிப்பாக கோவளம் மற்றும் முட்டுக்காடு அருகே, இயற்கைப் பேரிடர்களிலிருந்து பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் பெருக்கத்திற்காக அலையாத்தி காடுகள் உருவாக்கப்பட்டன.

கடலூர் (95 ஹெக்டேர்): பிச்சாவரம் காடுகளின் விரிவாக்கம் மற்றும் தொடர்ச்சி பாதை உருவாக்கம்.

புதுக்கோட்டை (90 ஹெக்டேர்): பவளப் பாறைகளைப் பாதுகாக்க அவணிகுலம் மற்றும் வேலூர் பகுதிகளில் நடவு. ராமநாதபுரம் (75 ஹெக்டேர்): மண்டபம் மற்றும் வாலிநோக்கம் பகுதிகளில் மீன் வளர்ச்சி மையங்களின் பாதுகாப்பு.

சென்னை (12 ஹெக்டேர்): பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் அடையாறு கழிமுகத்தில் நகர்ப்புற சுற்றுச்சூழல் மேம்பாடு.

சென்னை: மாநகர பசுமை முன்னெடுப்பு பெருநகரமான சென்னையில் அலையாத்தி காடுகள் உருவாக்குவது ஒரு தனித்துவமான சவாலாக இருந்தாலும், தி.மு.க. அரசு இதை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது:

**பக்கிங்ஹாம் கால்வாய் பசுமைத் திட்டம்:**

கழிப்பட்டூர் ஓ.எம்.ஆர் சந்திப்பு பகுதியில் 12 ஹெக்டேர் பரப்பளவில் 12,500க்கும் மேற்பட்ட அலையாத்தி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இது நகர வெள்ள நிர்வாகத்திற்கும், மழைநீர் சேகரிப்பிற்கும் உதவுகிறது. அடையாறு கழிமுக மீட்டெடுப்பு: அடையாறு ஆற்றின் முகத்துவாரத்தில் 5 ஹெக்டேர் பரப்பளவில் 5,000 செடிகள் நடப்பட்டு, நீர் மாசுபாடு குறைப்பு மற்றும் பறவைகள் வருகையை அதிகரிக்க உதவியுள்ளன. எதிர்காலத் திட்டம்: 2024-25ல் கூவம், அடையாறு, மற்றும் கொசஸ்தலையார் ஆறுகளின் கழிமுகங்களில் 1,00,000 புதிய மரக்கன்றுகள் நடவு செய்ய 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புடன் இது மேற்கொள்ளப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில், குறிப்பாக கோவளம் மற்றும் முட்டுக்காடு போன்ற கடலோரப் பகுதிகளில், 10 ஹெக்டேர் பரப்பளவில் புதிய அலையாத்தி காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சி, கடல் அரிப்பைத் தடுப்பதோடு, உள்ளூர் மீனவர் சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், பல்லுயிர் பெருக்கத்திற்கும் வழிவகுத்துள்ளது. இத்திட்டம், சென்னையை அடுத்த பெருநகரப் பகுதியில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்யும் ஒரு முக்கிய முன்னெடுப்பாக அமைந்துள்ளது.

### புனரமைப்பு: புத்துயிர்

புதிய நடவு மட்டுமல்லாமல், 1,207 ஹெக்டேர் சிதைந்த அலையாத்தி காடுகள் அறிவியல் அடிப்படையில் புனரமைக்கப்பட்டுள்ளன மண்ணின் உப்புத்தன்மை, pH மட்டம், மற்றும் ஊட்டச்சத்து பகுப்பாய்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டது. இயற்கை நீர் ஓட்டம் மீட்டெடுக்கப்பட்டு, உப்பு மற்றும் இனிப்பு நீரின் கலப்பு சமநிலைப்படுத்தப்பட்டது. மீன், இறால், நண்டு இனங்கள் மீளவும், உயிரியல் சங்கிலி வலுப்படுத்தப்பட்டது.

### ஒரு முன்னுதாரணம்

தமிழ்நாடு அரசின் இந்த மாபெரும் முயற்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பல்லுயிர் பெருக்கம், மற்றும் கடலோர மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. செங்கல்பட்டு உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் புதிய அலையாத்தி காடுகளின் உருவாக்கம், மாநிலத்தின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்கிறது.

இந்தியாவில் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக, தமிழ்நாடு தனது இயற்கை வளங்களை மீட்டெடுத்து, வருங்கால சந்ததியினருக்கு ஒரு பசுமையான, பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதி செய்கிறது. “பசுமை தமிழகம்” என்ற கனவு, அலையாத்தி காடுகளின் மறுமலர்ச்சியுடன் நனவாகி வருகிறது.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை யொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 216 வது நாள்!

## கொளத்தூர் கிழக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!





*சென்னை,செப்.24-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 216 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (23.09.2025), கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 68, பெரியார் நகர், ஜெகநாதன் சாலை. 2) வட்டம் 68அ, 70 அடி சாலை ஜவகர் நகர் மெட்ரோ (KFC எதிரில்) சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் . பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், பகுதிச் செயலாளர்கள் ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர் செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ். சித்திக், எஸ்.தனசேகர், டி. யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி. எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம். பி.தமிழ்ச்செல்வன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், அன்பரசன், ஆதவன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

---

# சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

## இன்று 11 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை, செப். 24 –

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று (24.09.2025) திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம்–1), வார்டு–9ல் திருவொற்றியூர் குப்பம், சென்னை தொடக்கப்பள்ளி அருகில் உள்ள துலுகானத்தம்மன் கோவில் தெரு, மாதவரம் மண்டலம் (மண்டலம்–3), வார்டு–23ல் மேற்கு காவாங்கரையில் உள்ள ராணி சங்குபதி திருமண மண்டபம், இராயபுரம் மண்டலம் (மண்டலம்–5), வார்டு–57ல் சௌகார் பேட்டை, அண்ணா பிள்ளை தெருவில் உள்ள சந்திரபுரி டிரஸ்ட் மண்டபம், திரு.வி.க. நகர் மண்டலம் (மண்டலம்–6), வார்டு–78ல் சூளை, சச்சிதானந்தம் தெருவில் உள்ள அறிஞர் அண்ணா மாளிகை சமுதாயக் கூடம், அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்–7), வார்டு–89ல் முகப்பேர் பிரதான சாலையில் உள்ள சின்னசாமி திருமண மண்டபம், அண்ணா நகர் மண்டலம் (மண்டலம்–8), வார்டு–104ல் ஐ பிளாக் 28வது தெருவில் உள்ள கம்பர் குடியிருப்பு குழந்தைகள் விளையாட்டுத் திடல், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்–9), வார்டு–117ல் கிரியப்பா சாலையில் உள்ள மாநகராட்சி சமுதாயக் கூடம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்–10) வார்டு–132ல் டாக்டர் அம்பேத்கர் சாலையில் உள்ள சமுதாயக் கூடம், வளசரவாக்கம் மண்டலம் (மண்டலம்–11), வார்டு–146ல் மதுரவாயல், பி.எச். சாலையில் உள்ள சீதாலட்சுமி திருமண மண்டபம், பெருங்குடி மண்டலம் (மண்டலம்–14), வார்டு–183ல் பாலவாக்கம், வி.ஜி.பி. லேஅவுட் 2வது பிரதான சாலையில் உள்ள வி.ஜி.பி. லேஅவுட் பார்க், சோழிங்கநல்லூர் மண்டலம் (மண்டலம்–15) வார்டு–198ல் கிராம நெடுஞ்சாலையில் உள்ள செல்லியம்மன் கோவில் மண்டபம் ஆகிய 11 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் ”உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

---

## மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ ஆலோசனை வழங்குகிறார்!

### தியாகராயர் நகரில் கட்டி முடிக்கப்பட்ட மேம்பால திறப்பு விழாவிற்கு முதல்வர் வருகை.!

# இளைஞரணி சார்பில் ஆலோசனை கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. அறிக்கை!

*சென்னை, செப். 24*

*சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இம்மாதம் வரும் 28ஆம் தேதி சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராய நகர் தொகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 141வது வார்டு 1வது பிரதான சாலையில் தொடங்கி 133வது வார்டு வடக்கு உஸ்மான் சாலையில் முடிவடையும் புதிய மேம்பாலத்தை திறந்து வைக்கிறார். இந்த திறப்பு விழாவுக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து ஆலோசனைகளை சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அவர்கள் வழங்குகிறார்.பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி, நந்தனம் மதி எம்.சி, எஸ். முரளி ஆகியோரின் முன்னிலையில், எனது தலைமையில் (ராஜா அன்பழகன் எம்.சி) வியாழக்கிழமை (25092025) மாலை 6 மணிக்கு, சி.பி.ராமசாமி சாலையில் உள்ள மயிலாபூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.*

*எனவே இக்கூட்டத்தில் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள் மற்றும் வட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*


*பொருள்: தியாகராயநகர் வருகை தரும் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.*

*இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.கே. பழனிச்சாமி
### செப்டம்பர் 24 (2000)



**திருவெற்றியூர் நகரக் கழகச் செயலாளராகவும், நகராட்சி மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்றவர்.**

**‘கழகத்தை உயிர்மூச்சாகக் கொண்டு ஓடியாடி உழைத்த உடன்பிறப்பு’ என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**